எர்ணாபுரம் கிராம ஊராட்சி தலைவரின் நடவடிக்கைகள்
முன்னிலை திரு.P.மாரப்பன்

ந. க. எண்.    /2023/ ஊராட்சி நிர்வாகம்    நாள்: 22.02.2024

பொருள்:-

மனைப்பிரிவு அங்கீகாரம்-நாமக்கல் மாவட்டம்-நாமக்கல் வட்டாரம் எர்ணாபுரம் ஊராட்சி சர்வே எண் 10/2B2-ல் 2.10 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல்- தொடர்பாக

பார்வை :-

1. அரசாணை (நிலை), எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் : 04.05.2017.
2. அரசாணை (நிலை) , எண். 112 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்: 22.06.2017.
3. அரசாணை (நிலை), எண்.138 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்: 04.06.2004.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் நாமக்கல் அவர்களின் கடித NKL/MC7JKONN/8452/2023 இ.ந.க.எண் நாமா 22.03.2023 SWP/DTCP/NKL Layout NO: 99/2023 நாள்: 22.03.2023
5. தான பத்திர ஆவண எண்:726/2023 நாள்:09.03.2023.
6. தனியாரால் வழங்கப்பட்ட 20/- உறுதிமொழி பத்திரம்.
7. கூராய்வு கட்டணமாக எர்ணாபுரம் ஊராட்சிக்கு செலுத்திய நாள்: 19.02.2024 (இந்தியன் வங்கி நாமக்கல் கிளை, நாள்:19.02.2024)
8. நகர் ஊரமைப்பு துறைக்கு உரிய கட்டணம் (3%Market value) செலுத்தப்பட்ட இ சலான் எண்20240219010243 நாள்: 19.02.2024

*******

பார்வை (1) மற்றும் (2) காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நாமக்கல் மாவட்டம் நாமக்கல் வட்டாரம் ஊராட்சி/கிராம சர்வே எண்கள். 10/2B2-ல் 2.10 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் வரைப்படுத்தப்பட்டு நாமக்கல் நகர அமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் ஒப்புதலின்படி மனைப்பிரிவிற்கு வரைபட எண்ணிட்டு SWP/DTCP/NKL Layout NO: 99/2023 ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது

மேற்படி மனை பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனை பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு பார்வை 5ல் காணும் தான பத்திரம் மூலம் வேலகவுண்டம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்தின் மூலமாகஎர்ணாபுரம் ஊராட்சிக்கு தானமாக பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

எர்ணாபுரம் கிராம ஊராட்சி மன்ற தீர்மான எண்: 184 நாள்:22.02.2024 இன் படி மனை பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனை பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு தான பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது

சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கு சாலை ஒப்படைப்பு செய்வதற்கும் உட்பிரிவு கட்டணத் தொகையினை செலுத்த மனுதாரரால் பார்வை 6இல்கண்டுள்ளவாறு ரூ 20/ கான ஒப்புதல்பத்திரம்கையொப்பம் பெறப்பட்டுள்ளது

பார்வை 7ல் கண்டுள்ளவாறு ஊராய்வு கட்டணம் 35 மனைகளுக்கும் ரூ 35,000 (இந்தியன் வங்கி நாமக்கல் கிளை) நாள்: 19.02.2024 மற்றும் மனை உட்பிரிவு 3% MARKET VALUE கட்டணம் பார்வை 8 ல் கண்டுள்ளவாறு 84968 (ரூபாய் 35 ஆயிரம் மட்டும்) (இசலான் எண்: 20240219010243 பாரத் பேங்க் ஆப் இந்தியா நாள் 19.02.2024) உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது

எனவே நாமக்கல் நகர ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் மனை பிரிவு வரைபட தொழில்நுட்ப அனுமதி SWP/DTCP/NKL Layout NO: 99/2023 ல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது

மேற்காணும் நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரம் ரத்து செய்திடவும் அதிகாரம் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது

தலைவர்
எர்ணாபுரம் ஊராட்சி.

தலைவர் ஊராட்சி மன்றம்
எர்ணாபுரம் ஊராட்சி
நாமக்கல் வட்டாரம்

பெருதல் :

திருமதி. இந்திரா பிரியதர்ஷினி
W/O செந்தில்குமா
184/116 உதயபுரி காலனி
நரசோதிப்பட்டி
சேலம்

நகல் :

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், நாமக்கல். (அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது).
2. சார்பதிவாளர் அலுவலகம் வேல கவுண்டம்பட்டி, நாமக்கல் மாவட்டம். (அவர்களுக்கு அனுப்பப்படுகிறது).
3. ஊரக வளர்ச்சி உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) நாமக்கல்.
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி ஊ) நாமக்கல் வட்டாரம் (தகவலுக்காக)